




33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நிதி: 33 | பாலம்: 03 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 01, 2023

# கனடியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் பற்றிய ஆய்வு

கனடியப்பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும், அவரது அமைச்சர்களும் 2023 ஜனவரி 23இல் இருந்து மூன்று நாட்கள் ஹமில்ரன் (Hamilton) நகரில் கூடி, தங்களது அரசியல் கொள்கைகள் பற்றி விவாதித்தனர். கனடிய நாடாளுமன்றத்தின் குளிர் கால கூட்டத்தொடர் ஜனவரி 30இல் ஆரம்பமாக உள்ளதை முன்னிட்டே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

கனடியப் பிரதமர் இந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் ஹமில்ரனில் மூன்று நாட்கள் நடைபெற உள்ள மத்திய அரசின் அமைச்சர்களுடனான கூட்டத்தில் கனடியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், கனடியர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் மற்றும் கனடியத் தொழிலாளர் மற்றும் வணிக நிறுவனங்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்குதல் பற்றி ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்திருந்தார்.

கோவிட்-19 பெருந்தொற்று நோய்ப்பரவலால் மூன்று வருடங்கள் பொருளாதார வளர்ச்சியில் உறுதியற்ற தன்மை உருவானது. அதைத் தொடர்ந்துவந்த ரஷ்ய - உக்ரைன் போரும் உற்பத்திப் பொருட்களின் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட தாமதங்களும் பணவீக்கத்திற்குக் காரணமாக அமைந்தன. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி எடுத்த வட்டி வீத உயர்வும் மேற்கூறிய நிகழ்வுகளும் தற்போது பொருளாதார வளர்ச்சியை மந்த நிலையை நோக்கித் தள்ளும் இந் நேரத்தில் கனடியப் பிரதமரும், அமைச்சர்களும் அரசியல் கொள்கைகள் பற்றி விவாதிக்க மூன்று நாட்கள் கூடியது ஊடகவியலாளர்களின் கவனத்தை அதன் பக்கம் திருப்பியிருந்தது.

ஜனவரி 30இல் ஆரம்பமாக உள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் அமைச்சர்கள் ஹமில்ரன் மாநாட்டு மையத்தில் கூடி ஆராய்ந்தனர். இந்த மாநாடு நடைபெறும் நாட்களில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும் அவரது அமைச்சர்களும் ஹமில்ரன் நகரில் பல நிகழ்ச்சிகளில் பங்கு பற்றவும், ஊடகவியலாளர் கூட்டங்கள் நடத்தவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.


Prime Minister Justin Trudeau and Hamilton MP Filomena Tassi

இக்கூட்டத்தொடரை ஆரம்பித்து வைக்கும் போது கனடியப் பிரதமர் ஹமில்ரன் வானொலியில் தாங்கள் இக்கூட்டத் தொடரை நடத்த ஹமில்ரன் நகரைத் தெரிவு செய்த காரணத்தைக் கூறியிருந்தார். Dofasco உருக்குத் தொழிற்சாலையில் புதிய பசுமையான முறையில் தொழில்கள் செய்வதற்கான முதலீடு ஆரம்பமாகியுள்ளது. ஹமில்ரன் நகரின் தொடருந்துப் போக்குவரத்துத் திட்டத்தில் மத்திய அரசு பங்களிக்கிறது. பல புதிய திட்டங்களை மத்திய அரசு ஹமில்ரனில் செய்கிறது. இவ்வாறு பல முதலீடுகள் மத்திய அரசு ஹமில்ரன் நகரத்துடன் இணைந்து செய்வதை நாடு முழுவதையும் பிரதிநித்துவப்படுத்தும் எமது அமைச்சர்கள் வந்து நேரிடையாகப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இம்முறை அமைச்சரவைக் கூட்டத்தை ஹமில்ரனில் நடத்துவதாகக் கூறினார்.


கூட்டத்தின் முதல்நாளில் கடினயப் பிரதமர், ஹமில்ரன் நாடாளுமன்ற உறுப்பினர் Filomena Tassiஉடன் ஹமில்ரன் நகரின் பல இடங்களுக்குச் சென்றார்.

ஹமில்ரன் சர்வதேச விமான நிலையமான John C. Munro விமான நிலையத்தின் $47 மில்லியன் பசுமை விஸ்தரிப்புத் திட்டத்தில் $23.5 மில்லியனை மத்திய அரசு முதலிடுவதாக அறிவிக்கப்பட்டது. போக்குவரத்து அமைச்சர் Omar Alghabra மற்றும் மத்திய பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் Filomena Tassi இந்த விமான நிலையத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பெரிய சரக்கு விமானங்கள் வந்திறங்க வசதிஅளிக்கும். பனிக்காலத்தில் விமானப் பயணத்தை மேற்கொள்ளக் கூடியவாறு விமானத்தின் இறக்கைகளில் இருந்து பனி அகற்ற உதவும் இயந்திர வசதிகள் செய்து கொடுக்கப்படும். விமான நிலையத்திற்கு வரும் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புதிய சாலைகள் உருவாக்கப்படும் என்று ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

Omar Alghabra விமான நிலையத்தைப் பார்வையிடும்போது ஊடகவியலாளர்களுக்கு இந்த விரிவாக்கம் இப்பகுதியில் உள்ள கனடியருக்குப் பல புதிய நிரந்தரமான நடுத்தர வர்க்க வேலைகளை உருவாக்கும். அத்துடன் இந்த விமான நிலையத்தில் வருடாந்தம் $2.1 பில்லியன் பெறுமதியான பொருளாதாரப பரிவர்த்தனை நடவடிக்கைகளை உருவாக்குவதே இந்த விரிவாக்கத்தின் நோக்கம் என்றார்.

நீதி அமைச்சர் David Lametti மற்றும் Hamilton East - Stoney Greek

தொடர்ச்சி 04 பக்கம்























# SRI LANKA CALLING




MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136



# For All Your Private Mortgage Needs





**AYNGKARAN SIVANANTHAM**
Business Development Manager
Mobile: (647) 670-0320
Email: ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital

## 8T Capital
Mortgage Administration # 13073

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கனடியப்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நாடாளுமன்ற உறுப்பினர் Chad Collins இருவரும் மது அருந்துதலுக்கு அடிமையான இளைஞர்களைப் புனர்வாழ்வளிக்கும் நிலையத்திற்குச் சென்றனர். 12 வயதில் இருந்து 17 வயது வரையிலான இளைஞர்களைப் புனர்வாழ்வளிக்கும் திட்டத்திற்கு அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு $600,000 முதலிடுவதாக அங்கு அவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

கூட்டத்தின் முதல்நாளில் ஹமில்டன் மாநாட்டு மையத்திற்கு வெளியில் 200பேர் வரையில் பதாகைகளுடன் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மேலதிக உரிமை கேட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். கூட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு முன்னர் கனடியப் பிரதமர் ஹமில்டன் நகர முதல்வர் Andrea Horwathஐச் சந்தித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பாக



Hamilton mayor Andrea Horwath and Prime Minister Justin Trudeau

ஊடகங்களுக்குத் தெரிவித்த நகர முதல்வர், "எமது தேவைகளைப் பற்றிப் பிரதமர் அறிந்திருக்கிறாரா என உறுதிப்படுத்தவே இந்தச் சந்திப்பை மேற்கொண்டோம்" என்றார்.

இரண்டாம்நாள் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சமூக மேம்பாட்டு அமைச்சர் Karina Gould கோவிட்-19 பெருந்தொற்றுநோய்ப் பரவலின் போதும் அதைத் தொடர்ந்தும் ஏற்பட்ட கடவுச்சீட்டு விநியோகத்தில் ஏற்பட்ட பின்னடைவைத் தற்போது நீக்கி விட்டதாகத் தெரிவித்தார். கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் தனது



Minister of Families, Children and Social Development Karina Gould

பணியாளர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தியதனாலேயே இதை நடைமுறைப்படுத்த முடிந்தது. இந்த நிதியாண்டில் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் மூன்றரை மில்லியன் கடவுச்சீட்டுக்களை வழங்கும். இது கடந்த நிதியாண்டில் வழங்கிய கடவுச்சீட்டுக்களின் இரண்டு மடங்காகும். கடந்த ஆண்டு வழங்கிய கடவுச்சீட்டுக்களில் 85%ஆனவை புதிய விண்ணப்பங்களாகும். கடவுச்சீட்டுகள் முதல்தரம் வழங்குவதற்கு அதிக நேரம் எடுக்கும். இதுவும் கடந்த வருடம் ஏற்பட்ட தாமதத்திற்கு ஒரு காரணமாகும். நாங்கள் பின்னடைவை நீக்கி தற்போது வழமையான நிலைக்கு வந்தாலும் 2023 கோடைகாலத்தில் ஒரு பெரும் அதிகரிப்பை எதிர்நோக்குகிறோம். கனடா 2013ஆம் ஆண்டில்தான் முதல்தரம் 10 வருடங்களுக்குச் செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகளை விநியோகம் செய்தது. அவற்றின் காலம் 2023 உடன் முடிவடைவதால் பலர் தமது கடவுச்சீட்டுக்களைப் புதுப்பிக்க அனுப்புவார்கள் என எதிர்பார்க்கிறோம். இது புதுப்பிக்கும் வேலை என்றபடியால் விரைவில் இவற்றைப் புதுப்பித்து வழங்கமுடியும் எனதான் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

நிதி அமைச்சரும் துணைப்பிரதமருமான கிறிஸ்டியா ப்ரீலாண்ட் (Chrystia Freeland) ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில், உலகப் பொருளாதாரத்



Minister of Finance and Deputy Prime Minister Chrystia Freeland

தில் நிச்சயமற்ற தன்மை இருப்பதாகவும், அது ஒரு சமநிலையில் இல்லாமல் இருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால், கனடாவின் பொருளாதாரம் வலிமையான நிலையில் இருக்கிறது என்றார். G7 நாடுகளிடையே 2022இல் ஒரு வலுவான பொருளாதார வளர்ச்சியுடனும் மிகவும் அதிக தொழிலாளர் பங்கேற்கும் நிலையிலும் எமது பொருளாதாரம் இருக்கிறது. எமது தொழில் வளர்ச்சி கடந்த டிசம்பர் மாதத்தில் மிகவும் வலுவாக இருந்தது. இந்தத் தரவுகள் எனக்கு முக்கியமானவை என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பணவீக்கம் உயர்ந்துள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். இவ்வாறு பணவீக்கம் உயர்ந்துள்ள வேளையில் அரசு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் செயற்படக் கூடாது. பணவீக்கத்தை மேலும் உயர்த்தும் நடவடிக்கைகளை அரசு எடுத்து கனடிய வங்கியின் வேலையைக் கடினமாக்கக் கூடாது. இதனால் மத்திய அரசு மிகவும் அவதானமாகவே செயல்படுகிறது என்றார்.

மாகாணங்களுடன் ஒரு புதிய சுகாதார பராமரிப்பு ஒப்பந்தம் செய்து சுகாதார பாதுகாப்பு விடயங்களில் மத்திய அரசு முதலிட உள்ளது என்று ஊடகவியலாளர்களுக்குத் துணை நிதி அமைச்சர் Randy Boissonault தெரிவித்தார். அவர் கனடியர் தமது சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார செலவினங்கள் பற்றிக் கரிசனையுடன் இருக்கின்றனர். இதை அறிந்த மத்திய அரசு சுகாதார பாதுகாப்பு விடயங்களுக்குப் போதிய நிதி அளிக்கப்படுவதை உறுதிசெய்ய மாகாண அரசுகளுடன் இணைந்து செயல்படத் திட்டமிட்டுள்ளது. பொருளாதாரத்தில் மிகவும் உறுதியான நிலை ஏற்படாவிட்டாலும் சுகாதார பாதுகாப்பு விடயங்களில் முதலிட மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில்





Demonstration in front of Hamilton Convention Centre

மேலதிக செலவுகளுக்கு ஒதுக்கிய பணத்தில் இன்னமும் சிறிதளவு இடம் உள்ளது என்றார்.

# பொதுச்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

தகப்பனார் Herbert Armand Journeaux மீன்பிடித்து தகரத்தில் அடைத்து விற்னை செய்யும் தொழிற்



சாலை ஒன்றின் உரிமையாளர். இவரின் தாயார் Amanda Maude Travers வீட்டு வேலைகளுடன் அவர்களது குடும்ப விளைநிலத்தையும் பராமரித்து வந்தார். Hazelஇற்கு இரண்டு அண்ணன்மாரும் இரண்டு அக்காமாரும் இருந்தனர்.

குவிபெக் உயர்தரப் பாடசாலையில் கல்விபயின்ற பின்னர் Hazel மொன்றியலில் Business Secretarial Schoolஇல் தனது படிப்பைத் தொடர்ந்தார். அக்காலத்தில் பெண்களுக்கான Ice Hockey அணியில் ஒரு விளையாட்டு வீரராகப் பங்குபற்றினார். பின்னர் மொன்றியலில் Kellogg தொழிற்சாலையில் பணிபுரிந்த Hazel 1942ஆம் ஆண்டில் ரொறொன்ரோவிற்கு Kelloggஇன் ஒரு கிளையைத் திறப்பதற்காக இடமாற்றம் செய்யப்பட்டார். 1967இல் அரசியலில் புகுவதற்காகத் தனது பணியில் இருந்து விலகினார்.

Hazel Journeauox ரொறொன்ரோவில் 1951ஆம் ஆண்டு Sam McCallionஐத் திருமணம் செய்தார். அப்போது அவர்களுக்கு திருமணப்பரிசாக Streetsville பட்டணத்தில் கிடைத்த காணியில் அவர்கள் திருமணத்தின் பின்னர் வாழ்ந்து வந்தனர். Hazel - Sam தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள். Sam அல்சைமர் நோயால் 1997இல் காலமானார்.

"எனது சொந்தப் பணத்தை செலவிடுவது போலவே வரி செலுத்துவோரின் பணத்தையும் நான் செலவிடுகிறேன். அதையே மிசிசாகா மக்கள் விரும்புகின்றனர்" என்று கூறிய Hazel McCallionஐ ஓர் உண்மையான பொதுச்சேவை செய்பவரின் வரைவிலக்கணமாகத் திகழ்ந்தவர் என Hazelஇன் மறைவை ஊடகங்களுக்கு வெளியிடும் போது ஒன்றாறியோ மாகாண முதல்வர் டக் ஃபோட் தெரிவித்தார்.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

ஒவ்வொரு தோல்வியும் ஓர் அனுபவம், ஒவ்வொரு இழப்பும் ஒரு இலாபம், ஒவ்வொரு ஏமாற்றமும் ஓர் எச்சரிக்கை, ஒவ்வொரு காணாமல் போதலும் ஒரு தேடல்.

# வேண்டும் அவதானம் - நாடும் நடப்பும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

அவதானம் என்பது உய்த்துணர்வு, கூர்மையாகக் கவனித்தல். இது ஒரு மேன்மைச் செயல். தமிழ்க் கலைகளில் அவதானக் கலை என்பது ஓர் அற்புதக் கலை. அவதானமென்பது, ஒரு கலையை அல்லது செய்தியைக் கிரகித்தல், சாதுரியம், நிதானம், திறமைக்கு வித்தாதல் பண்புகளைப் பெற்று ஒரு சவாலை, காரியத்தை செய்து முடித்தல் என்பவையே. பல வெவ்வேறு விடயங்களை கவனத்தில் கொண்டு அவற்றில் தேவையானவற்றை நினைத்தமாத்திரத்தில் வெளிக்கொண்டு வருகின்ற திறமையை அவதானித்தல் எனலாம். அவதானித்தல் என்றால் மனக்குவிப்புச் செய்து விடயங்களைக் கிரகித்துக் கொள்வதாகும். அவதானிப்பு என்பது அறிவியல் நடைமுறை ஒன்றின் ஆரம்பச்செயற்பாடு ஆகும். அவதானிப்பு பண்புசார் தன்மை கொண்டதாக அல்லது அளவுசார் தன்மையதாக இருக்கும். அவதானங்களை எட்டு வகையான அட்டவதானம், பத்து வகையான தசாவதானம், பதினாறு வகையான சோடசாவதானம், நூறு வகை அவதானங்களைக் கொண்ட சதாவதானம் என வகைப்படுத்தலாம். அவதானத்தின் முக்கியத்துவம் உணரப்படாது, அவதானம் என்பது அருகியே விட்டது. இது குடும்பத்துக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கும், நாட்டுக்கும்கூட மிக அவசியமானது. இதை தொலைத்துவிட்டு அவதிப்படுவோர் பலர்.

அவதானிப்பு ஆழமான நுண்ணறிவுகளை வழங்குகிறது. ஒழுங்கான அவதானிப்பு வடிவங்கள் சிறந்த மதிப்பீட்டுக்கு உதவும். அபிவிருத்தி நோக்கத்தை அடைய வினைத்திறன் கொண்டதாக இருக்கும். ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் அவதானிப்பானது பெறுபேறுகள், அழுத்தங்கள் என்பவற்றின் தாக்கங்களையும், வினைத்திறனையும், மதிப்பீடு செய்ய உதவும். அத்துடன் முன்னேற்றம் மற்றும் தேவையான திருத்தங்கள் என்பவை தொடர்பான தீர்மானம் எடுக்கவும் உதவும். ஓர் அவதானிப்பு என்பது நீங்கள் ஒரு அறிக்கையாகப் பார்க்க, மற்றும் பதிவு செய்யும் ஒன்று. இது வெளியில் பிரகாசமாக இருக்கிறது. எவராயினும், எங்கும் அவதானம் வேண்டும். அவதானம் அலட்சியம் செய்யப்படுமாயின் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும். இருக்கிறது. இதனை அவதானிக்க முடிகின்றது.

சூழல் அவதானிக்கப்பட வேண்டும். இதன் மூலம் நிலம், நீர், வளி என்பன பாது காக்கப்பட்டு எதிர்காலச் சந்ததியினருக்கு ஒழுங்காகக் கையளிக்க முடியும். போதைப் பொருள் பாவனை, கடத்தல், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பொருட்கள்



பதுக்கல், தரக்குறைவு, பழுது, ஊழல் மோசடிகள், கள்ள நோட்டு அடித்தல், பாவனை, மருந்து வகைகளின் விலைக் கட்டுப்பாடு, காலாவதியான, தரக்குறைவான மருந்துகளை விற்பனை செய்தல், கொரோனாப் பரவலைக் கட்டுப் படுத்துதல் மற்றும் நோய் பரவுதல் ஆகிய விடயங்களில் செலுத்தப்படும் அவதானத்தைப் பொறுத்து விளைவு இருக்கும். ஒருவர் பெறுகின்ற அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி. அவர் பெறுகின்ற கல்வி அவரது ஆளுமைக்கும், ஆற்றலுக்கும் அடித்தளமாக இருந்து அவரது ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்ய வழிகோல வேண்டும். ஆனால் அறிவு நுட்பத்திற்கான அடித்தளமாக இருந்த கல்வி அவதானிக்க வேண்டியவர்களின் அவதானிப்புக் குறைவால் இன்றைய சூழலில் அந்த நிலையிலிருந்து மாறி, பொருளீட்டுகின்ற, வணிகத்திற்கான படிக்கட்டுக்களாக மாறியுள்ளன. அத்துடன் தண்டிக்கப்படாத எந்த ஒருவரும், எந்த மாணவரும் முன்னேறியதாகச் சரித்திரம் இல்லை. இன்று ஆசிரியர்கள் மாணவர்களைப் பார்க்கிறார்களே தவிர, கவனிப்பதில்லை. சட்டமும், விதிகளும் ஆசிரியர் மாணவர்களிடம் பிரிவை உருவாக்கி உள்ளது.

மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சியை அடைந்துள்ளனரா என்ற விடயம் தொடர்பாக ஆசிரியர்கள் அவதானம் செலுத்தத் தவறக்கூடாது. ‘கற்றல் என்பது நடத்தை மாற்றமாகும். அதாவது அவதானம், பயிற்சி அல்லது செயலில் ஈடுபடல் என்பவற்றின் அடிப்படையில் நிலைத்திருக்கும் நடத்தை மாற்றம்’ என லொவெல் கூறுகிறார். ஆசிரியரின் நடிபங்குகள் கவனிக்கப்பட வேண்டியவை. ஆசிரியர் கற்பிக்கும்போது அந்த வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவரும் ஆசிரியரின் கற்றல் செயற்பாட்டினை உற்றுக் கவனித்துக்கொள்ளும் வகையில் கற்றல் நிகழவேண்டும். இதில் ஏற்படும் தவறுகளால் பிள்ளைகள் தவறுகின்றனர். நிகழ்காலத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் எதிர்காலம் நம்மை வரவேற்கும். இல்லையேல் வரவேற்பற்ற வாழ்க்கையே வாழவேண்டிவரும். தனி மனித அவதானிப்பு, குடும்ப அவதானிப்பு, வேலை பார்க்கும் நிறுவன அவதானிப்பு, சமூக அவதானிப்பு இவை ஒழுங்காக இருந்தால் நடத்தைகள் உட்பட எல்லாம் வாழ்வியலுக்கு சாதகமாக அமையும். நாம் எம்மில் அவதானம் இல்லாமல் இருந்தால் நம் அனுமதி இல்லாமல் நம்மைச் சிலர் அத்துமீறி ஆக்கிரமிப்பர். நம்மை தங்கள் வசதிக்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்வர். காலையில் கண் விழித்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு விடயத்தையும் விழிப்பு நிலையிலிருந்து எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். உலகை வெற்றி கொள்ள வேடிக்கை பார்க்காதீர்கள். உற்றுக்கவனியுங்கள் உற்றுக் கவனிப்பவர்களே வெற்றிபெறுகின்றனர். வாழ்வில் பலர் தோற்கக்காரணம் வாழ்க்கையின் நோக்கத்தில் எண்ணம், உணர்ச்சியில் அவதானம் குறைவாக இருத்தல். ஒன்லையின் விளையாட்டுக்கள் (online games) பிள்ளையின் எதிர்காலத்தைத் தகர்க்கும் விளையாட்டு. அதிகம் விளையாடுவது ஆபத்து. இதனால் ‘வீடியோ கேம்ஸ் தம்ப்’ (video games thumb) என்ற நோய்க்கு ஆளாகின்றனர். இதற்குக் காரணம் பெற்றோரின் அவதானிப்புக் குறைவே ஆகும். இணையத்துக்கு மோசமான பக்கமும் உண்டு. பெற்றோரின் சரியான அவதானிப்பு இல்லையேல் மோசமான பக்கத்துக்குள் இளசுகள் செல்ல நேரிடும். ஆபாசமான எண்ணங்களை பிள்ளைகள் சுமக்க நேரிடும். சுமக்கின்றனர். இதனால் ஒரு தலைமுறை வஞ்சிக்கப்படுகிறது.

முடிவுகள் எடுக்கும்போது எந்தச் சூழ்நிலையில் முடிவு எடுக்கிறோம் என்பது முக்கியம். மனம் சமநிலையில் இருக்கும் போது முடிவுகள் எடுக்கப்படின் அந்த முடிவு அவதானம் பிறழாத முடிவாக அமையும். எந்த விடயத்தையும் நாம் ஆரம்பிக்குமுன் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றில் அவதானம் கொள்ள வேண்டும். நாம் பேசும் பேச்சிலும் அவதானம் வேண்டும். ஒலிக்கு அதிர்வு உண்டு. அவதானக் குறைவால் பேசும் வார்த்தைகளால் ஒருவரின் மனதை நொருங்க வைக்க முடியும். ஒருவனை வீழ்த்த வேண்டுமாயின் அவனது மனதைக் கலைக்க வேண்டும். இதற்காகவே சிலர் அடுத்தவர் மனதை சிதைக்கும் வார்த்தைகளை பேசுகின்றனர். ‘நம்பநட நம்பி நடவாதே’ என்ற பழமொழி



தாம்பெற்ற அனுபவத்தால் மூத்தோர் சொல்லிவைத்தனர். அதற்கமைய நம் வாழ்விலும் அவதானமாக இருக்க வேண்டியது இன்றைய தலைமுறையினரின் தவிர்க்க முடியாத காலம்.

முன்கூட்டியே திட்டமிட்டு, விழிப்புணர்வுடன் விளைவறிந்து ஒரு செயலைச் செய்யும் போது அவதானம் ஏற்படும். இது வாழ்வை நேர்கோட்டில் கொண்டுசெல்ல உதவும். அவதானம் அற்ற வாழ்க்கை குருட்டு வாழ்க்கையாகும். எனவே வாழ்வுக்கு வேண்டும் அவதானம். அவதானத்தில் அவதானிப்பும் வேண்டும்.

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228

Mr. S.F. Xavier (Teacher)

Sam Surendran
Mortgage Broker
LICENCE # M16002312
647-922-5704
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

## நாமும் நமது இல்லமும் 624

# கனடிய வட்டி வீதம் மேலும் அதிகரிப்பு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்திய வங்கி ஜனவரி, 25, 2023 அன்று தனது எட்டாவது (8) வட்டி வீத அதிகரிப்பை 0.25%இனால் ஏற்படுத்தி யுள்ளது. உலகளாவிய பணவீக்கம் அதிகரித்துக் காணப்படுவதே முக்கிய காரணமாக வட்டிவீதம் அதிகரிப்படுகின் றது. ஏற்கனவே கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 4.25%ஆகக் காணப்பட்டது. இன்றைய அதிகரிப்புடன் கனடிய வட்டி வீதம் 4.5%ஆகக் காணப்படுகின்றது. இன்றைய புதிய வட்டி வீதம் 2007இற்கு பிற்பாடான அதிகூடிய வட்டி வீதமாகும்.

உலகளாவிய பொருளாதார அதிகரிப்பு 2.5%ஆகக் குறைந்துள்ளது. அடுத்த வருடம் மேலும் குறைந்து 2%ஆகலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

அண்மைய, கனடியப் பொருளாதார அறிக்கையில் தெரிய வருவதாவது, கனடியப் பொருளாதாரம் ஆரோக்கிய மாகக் காணப்படுகின்றது. அதிகமான பொருளாதார தேவை இருப்பதாகவும் தொழில்புரிவதற்குத் தகுந்த தொழிலாளர் களை தேடுவதில் நெருக்கடி இருப்பதாக வும் தெரிய வருகின்றது. தொழில் தேடுபவர்களின் எண்ணிக்கை (Unemployment Rate) ஏறக்குறைய சரித்திரக் குறைவாக இருப்பதாகவும் அறியக்கூடியதாக உள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு கனடியர்களின் மாதாந்த செலவில் மிகப்பெரிய அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் கனடியர்களின் மற்றைய நாளாந்த செலவுகள் குறைக்கப்படுகின்றது. ஆதன விலையும் வியாபாரமும் கட்டுப்படுத்துகின்றது.

அத்துடன் வெளிநாட்டு ஏற்றுமதியும் பாதிக்கப்படுகின்றது. கனடியப் பொருளாதார வளர்ச்சியில் தடங்கல் ஏற்படலாம். பொருளாதார வளர்ச்சி 2023 மற்றும் 2024இல் முறையே 1% மற்றும் 2%ஆகக் குறையலாம் என மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. இந்தப் பெறுமதி ஏற்கனவே எதிர்வு கூறியதனை விடக் குறைவாகவே உள்ளது.

கனடிய மத்திய வங்கியின் எதிர்பார்ப்பின் படியே, பணவீக்கம் யூன் 2022இல் 8.1%ஆகக் காணப்பட்டது. இந்தப் பெறுமதி டிசெம்பர் 2022இல் 6.3%ஆகக் குறைந்துள்ளது.

பொருட்களின் விலையிலும், எரிபொருளின் விலையிலும் ஏற்பட்ட விலை இறக்கமே முக்கிய காரணமாகக் கொள்ளலாம்.

பணவீக்கம், தனது உச்சத்தை அடைந்து விட்டது எனவும், இப்பொழுது இறங்கு பாதையில் இருப்பதாகவே கனடியர்கள் இதனை நோக்குகின்றனர். மார்ச் 08, 2023இல் வட்டி வீதத்தில் எவ்வாறான மாற்றம் ஏற்படும் என்பதனை இன்றைய நிலையில் வெளிப்படுத்த முடியாத




நிலையில் உள்ளது. எனினும் வட்டிவீத அதிகரிப்பும் குறிப்பிட்ட காலத்திற்கு மாறாமல் இருக்கலாம் என எதிர் பார்க்கலாம். அதன் பிற்பாடு குறையலாம் என்பதே பொருளாதார ஆய்வாளர்களின் குறிப்பாக உள்ளது. எனினும் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீத குறிக்கோள் 2% என்பதனை அடைவதற்குத் தேவை ஏற்பட்டால் மேலதிக வட்டிவீத அதிகரிப்பு தேவைப்படலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் திரு. ரிம் மக்கலெம் (Tim Macklem) தெரியப்படுத்தியுள்ளார். அடுத்த மத்திய வங்கயின் வட்டிவீத அறிகை மார்ச் 08, 2023இல் வெளியிடப்படும்.

கனடியப் பொருளாதாரத்தில் சில வெளிப்பாடுகள்

- 22%ஆன கனடியர் முற்றாகப் பணம் இல்லாமல் இருப்பதாகத் தெரியப்படுத்தி யுள்ளனர்.
- கனடிய மத்திய வங்கியின் எதிர்பார்ப்பு, 2023இன் நடுப்பகுதியில் பணவீக்கம் 3% ஆகக் குறையலாம். 2024இல் 2%ஆகக் குறையலாம் என்பதாகும்.
- இன்றைய கனடிய முதன்மை வட்டி வீதம் 6.70%.

**Bank of Canada Overnight Rate Changes Since 2010**

| Release Date | Target Overnight Rate | Change |
|---|---|---|
| June 01, 2010 | 0.50% | 0.25% |
| July 20, 2010 | 0.75% | 0.25% |
| September 08, 2010 | 1.00% | 0.25% |
| January 21, 2015 | 0.75% | -0.25% |
| July 15, 2015 | 0.50% | -0.25% |
| July 12, 2017 | 0.75% | 0.25% |
| September 06, 2017 | 1.00% | 0.25% |
| January 17, 2018 | 1.25% | 0.25% |
| July 11, 2018 | 1.50% | 0.25% |
| October 24, 2018 | 1.75% | 0.25% |
| March 04, 2020 | 1.25% | -0.50% |
| March 13, 2020 | 0.75% | -0.50% |
| March 27, 2020 | 0.25% | -0.50% |
| March 02, 2022 | 0.50% | 0.25% |
| April 13, 2022 | 1.00% | 0.50% |
| June 01, 2022 | 1.50% | 0.50% |
| July 13, 2022 | 2.50% | 1.00% |
| September 07, 2022 | 3.25% | 0.75% |
| October 26, 2022 | 3.75% | 0.50% |
| December 07, 2022 | 4.25% | 0.50% |
| January 25, 2023 | 4.50% | 0.25% |



# பொதுச்சேவையின் வரைவிலக்கணம் மறைந்தது!

'Hurricane Hazel' எனப் பொது மக்களால் செல்லமாக அழைக்கப்படும் பொதுமக்களுக்காக அயராது உழைத்து வந்த அம்மையார் தனது 101ஆவது வயதில் 2023 ஜனவரி 29 திகதி காலை இயற்கை எய்தினார்.



Hazel McCallion தனது அரசியல் வாழ்க்கைப்பயணத்தை தற்போது மிசிசாகா நகரசபையின் ஒரு பகுதியாக இருக்கும் அந்நாளைய Streetsville பட்டணசபை உதவி நிர்வாகியாகித் தேர்தலில் போட்டியிட்டதன்மூலம் 1964 இல் ஆரம்பித்தார். அத்தேர்தலில் அவர் தோல்வி அடைந்தாலும் 1967இல் நடைபெற்ற தேர்தலில் Streetsville பட்டணசபை உதவி நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் தொடர்ந்து 17 முறை வெற்றி பெற்றார்.

1970இல் நடைபெற்ற தேர்தலில் Streetsville பட்டணசபை முதல்வராகத் தெரிவானார். 1974இல் தற்போதைய மிசிசாகா நகரசபை உருவாகிய பின்னர்



1978இல் Hazel McCallion மிசிசாகா நகரமுதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றில் இருந்து 2014ஆம் ஆண்டில் இளைப்பாறும் வரை 12 முறை தேர்தலில் வெற்றிபெற்று 36 ஆண்டுகள் மிசிசாகா நகர முதல்வராகப் பதவி வகித்தார். அவர் தனது முதலாவது நகரமுதல்வருக்கான தேர்தலில் 1978ஆம் ஆண்டில் தேர்தல் பிரசாரம் செய்தார். அதன் பின்னர் நடைபெற்ற எந்த ஒரு நகரசபைக்கான தேர்தலிலும் பிரசாரம் செய்யாமலே அவரை மிசிசாகா மக்கள் தங்கள் நகர முதல்வராகத் தெரிந்தெடுத்தனர். இரண்டு முறை அவரைப் போட்டியின்றி நகரமுதல்வராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர். மற்றைய பத்து முறையும் தேர்தலில் பலர் போட்டியிட்டாலும் அவர் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். தேர்தல் காலத்தில் அவரின் ஆதரவாளர்களிடம் இருந்து எந்த நன்கொடையும் வாங்காமல் அவர்களை அப்பணத்தை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குமாறு கூறுவார்.

எந்த விடயமானாலும் தனக்குச் சரி எனப்படுவதை வெளிப்படையாகப் பேசுபவரான Hazelஇன் அரசியல் வழக்கத்தால் பொதுமக்களால் அவர் 'Hurricane Hazel' என அழைக்கப்பட்டார். பாலஸ்தீன அரசை உருவாக்குவதற்கு வெளிப்படையாக ஆதரவளித்த முதல் கனடிய அரசியல்வாதிகளில் 'Hazel McCallion' ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தானே தனது வீட்டு வேலைகளைச் செய்து வருவதாகப் பேட்டி ஒன்றில் கூறிய Hazel வீட்டு வேலையும் தோட்ட வேலையும் உடற்பயிற்சிக்கு முக்கியமானவை. அவையே ஒருவரை அடக்கமாக (Humble) வைத்திருக்கும் என்றார்.



2014ஆம் ஆண்டில், 93 வயதில் மிசிசாகா நகர முதல்வர் பதவியில் இருந்து இளைப்பாறினாலும் அவர் ஓய்ந்து இருக்கவில்லை. 2015ஆம் ஆண்டில் அவரை Sheridan's college தனது முதலாவது வேந்தராக (chancellor) நியமித்தது. 2017இல் அவர் ரொறொன்ரோ மாநகர விமான நிலைய ஆணைக்குழுவின் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

Hazel Journeaux 1921 பெப்ரவரி 14இல் குவிபெக் மாகாணத்தில் உள்ள Port Danielஇல் பிறந்தார். இவரின்

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)

ஆயிரக்கணக்கான தாதியர்கள், மருத்துவர்கள் மற்றும் தனிநபர் பராமரிப்புப் பணியாளர்களை ஒன்ராறியோ தற்போது பணிக்கமர்த்தி வருகின்றது.

இந்தப் பராமரிப்புடன் இணைவதற்கு நாம் உங்களுக்கு உதவும் அனைத்து வழிகளையும் ontario.ca/YourHealth இல் பார்வையிடவும்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# நானிலம் போற்றும் நட்பு - 14



- அகணி -
authorakani@gmail.com

"குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக் கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு." (அதிகாரம் நட்பாராய்தல், குறள் 794) என்ற குறளுக்கு "உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வருகின்ற பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்பு கொள்ளவேண்டும்" என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நல்ல குடியில் பிறந்து தனக்கு வரும் பழிக்கு வெட்கப்படுபவனை எதைக் கொடுத்தும் நட்பாக்கிக் கொள்ளலாம்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக் குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார். "உயர்ந்த குடியிலே பிறந்து, பழிக்கு அஞ்சுகின்றவனை விலை கொடுத்தாவது நட்பாக்கிக் கொள்ள வேண்டும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

ஒருவன் பழிக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என எண்ணுவானாக இருந்தால் நல்ல செயல்களை செய்ய எண்ணுவான். தீயதைச் செய்யத் தயங்குவான். அப்படிப் பட்டவர்களை நண்பராகக் கொள்ள வேண்டும். புலத்தை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை இக்குறள் எடுத்துக் கூறுகிறது. சங்கம் மருவிய காலத்தில் பல சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் நட்பு பற்றிக் கூறும் கருத்துக்களையும் ஆராய்வோம். நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 24 கூடா நட்பு அதிகாரத்தில் நாலடியார் பாடல் 233இனைக் கவனிப்போம்.

233."நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால் - நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று."

இப்பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம். "நுண் உணர்வினாரொடு கூடி - நுட்பமான அறிவுடையவர்களோடு சேர்ந்து, நுகர்வு உடைமை - புசிப்பதைக் கொண்டிருத்தல், விண் உலகே ஒக்கும் விழைவிற்று - தேவலோகத்தையே ஒத்திருக்கும் படியான மேன்மையுள்ளது. ஆம் நுண் நூல் உணர்வு - நுட்பமான சாஸ்திரஞானம், இலர் ஆகிய - இல்லாதவர்களாகிய, ஊதியம் இல்லார் - பயனற்றவர்களை, புணர்தல் - சேர்தல், நிரயத்துள் ஒன்று - நரகங்களுள் ஒன்றாம், ஆல் - அசை."

"உணர்விற்கு நுட்பமாவது உள்ளுறையைக் கிரகித்தல், நூலுக்கு நுட்பம் பொறிக்கும் மனதிற்கும் சாதாரணமா யெட்டாதவை களை அறிவிப்பது விண்ணுலகே - ஏகாரம் - பிரிநிலை."

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"கூர்மையான அறிவுடையோருடன் கூடிப் பழகி மகிழ்ந்திருக்க வாழ்வைப் போன்ற தொரு இன்பம் தருவதாகவும். நல்ல நூல் பல கற்றறிந்த, அறிவில்லாத எவர்க்கும் எந்த வகையிலும் பயன் இல்லாது வாழும் கீழோருடன் கொண்ட நட்பு நரகம் போன்றது. துன்பம் தருவது."

234. "பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதும் சொல்லாதே நந்தும் - அருகெல்லாம்
சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட!
பந்தமி லாளர் தொடர்பு."

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"அருகு எல்லாம் - பக்கங்களிலெல்லாம், சந்தனம் நீள்சோலை - சந்தன மரங்களுடைய பெரிய தோப்புக்களோடு கூடிய, சாரல் மலை நாட - சாரல்களையுடைய மலைகளுள்ள நாட்டரசனே பந்தம் இலாளர் தொடர்பு - மனப்பற்றில்லாதவருடைய சிநேகம், வை தீ போல் - வைக்கோலிற் பற்றிய நெருப்பைப் போலே, பெருகுவது போல தோன்றி - வளர்வது போலே காணப்பட்டு, ஒரு பொழுதும் -, செல்லாதே - (காரியத்தில்) உபயோகப்படாமல், நந்தும் - கெடும்,"

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"வேகமாகப் பற்றி வளர்வது போல்




தோன்றும் காட்டுத் தீ தொடர்ந்து எரியாது சீக்கிரம் அணைந்துவிடும். அதுபோலவே சந்தன மரங்கள் அடர்ந்த நீண்ட சோலை களை உடைய நாட்டுக்குத் தலைவனே!. உள்ளன்பு இல்லாதவர் நேசமும் நெடுநாள் தொடராது.

235. "செய்யாத செய்தும்நாம் என்றலும் செய்தவனைச்
செய்யாது தாழ்த்துக் கொண்டு ஓட்டலும் - மெய்யாக
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கும் அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்."

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம். "செய்யாத - செய்யக்கூடாத வற்றை, நாம் -, செய்தும் என்றாலும் - செய்வோம் என்று சொல்வதும், செய்வதனை - செய்ய வேண்டியதை, செய்யாது - செய்யாமல், தாழ்த்துக் கொண்டு ஓட்டலும் - நீடிக்கச் செய்து வைப்பதும், மெய்யாக - சத்தியமாகவே, இன்பு உறும் பெற்றி - (ஐம்புலன்களின்) இன்பமுறுந் தன்மையை, இகழ்ந்தார்க்கும் - நீக்கினவர்களாகிய துறவிகளுக்கும், அந்நிலையே - அப்போதே, துன்பு உறும் பெற்றி - துன்பத்தை அடையும் படியான தன்மையை, தரும் - கொடுக்கும்,"

"செய்யக் கூடாதவைகளைச் செய்வோ மென்று வீண் முயற்சி செய்வதும், செய்யத் தக்கவைகளைச் செய்யாமல் சாவகாசப்படுத்திப் போடுவதும் துறந்தவர் களுக்கும் துன்பமுண்டாக்கும் என்றபடி."

"செய்தும் - தனித்தன்மைப் பன்மை வினைமுற்று, தும் - விகுதியே எதிர்காலங் காட்டும்."

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"செய்து முடிக்கச் சிரமமான காரியங் களைச் செய்து காட்டுகிறேன் என்று வீராப்புப் பேசுவதும், செய்யக் கூடிய எளிய செயல்களைக் கூடச் செய்யாமல் காலம் தாழ்த்துவதும், நாட்களை வீணே கடத்திக் கொண்டிருப்பதும், வாழ்நாளை வீணாக்குகின்ற செயல்கள் ஆகும். இப்படிப் பட்டவருடன் நட்புக் கொள்ளுத லும் துன்பமேயாகும்.

236. "ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை ஆம்பல்ஒக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினும்நீர் அல்லார்
கருமங்கள் வேறு படும்."

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"ஒரு நீர் பிறந்து - ஒரே ஜலத்திலே உண்டாகி, ஒருங்கு - ஒரேவிதமாக, நீண்டக்கடைத்தும் - வளர்ந்தாலும், விரி நீர் குவளையை - விஸ்தரித்த நற்குணமுள்ள நீலோற்பலத்தை, ஆம்பல் - ஆம்பற் பூ, ஒக்க அல்லா - ஒக்கமாட்டர் பெரு நீரார் கேண்மை கொளினும் - மிகுந்த சற்குணமுள்ளவருடைய சிநேகத்தைப் பெற்றாலும், நீர் அல்லார் - குணவான்களாகாதவருடைய, கருமங்கள் - காரியங்கள், வேறுபடும் - வேறாய்ப்போம்,"

"குணவான்களோடு கூடியிருக்கிறாரென்று குணமில்லாதவரைத் தக்க காரியங்களில் நட்புக் கொள்ளலாகா தென்பது கருத்து."

"ஒருங்கு - முதனிலை வினையெச்சப் பொருட்டாய் வந்தது, நீண்டக்கடைத்தும் - இதுவும் ஒருவகை வினையெச்சம் கடை - விகுதி, து - சாரியை."

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.


"ஒரே குளத்தில் முளைத்து, ஒன்றாக வளர்ந்து, ஒன்றாகவே இருக்கின்றன. செழுங்கழுநீர்ப் பூவும், அல்லிப் பூவும். அதனால் இரண்டும் ஒன்றாகி விடுவ துண்டோ? செழுங்கழுநீர் வேறு. ஆம்பல் வேறுதான். செழுங்கழுநீர்ப் பூவின் மணமே அதை ஆம்பலில் இருந்து பிரித்துக் காட்டிவிடும் அதுபோலத்தான், கீழோர் மேலோருடன் சேர்ந்து பழகினும், மேலோர் ஆகார். அவர்களின் இழிகுணச் செயல்களே அவர்களை மேலோரிடம் இருந்து பிரித்துக் காட்டிவிடும்.

237. "முற்றல் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கும் மலைநாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு."

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"முற்று அல் சிறு மந்தி - முதிராத சிறிய குரங்கு, முன்பட்ட தந்தையை - எதிரே நேர்ந்த தன் தந்தையாகிய பெருங்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)



# தெய்வீக குரல் தெய்வத்துக்கே!

## பாடகி ஜென்சி - நேர்காணல் நேர்கண்டவர்: கண்ணன்

‘தெய்வீக ராகம்’, ‘என் வானிலே’, ‘காதல் ஓவியம்’, ‘என் உயிர் நீதானே’, ‘ஆயிரம் மலர்களே’, ‘அடிபெண்ணே’ என 1980 களில் பாடி தமிழ் இளசுகளின் இதயத்தில் மட்டுமல்ல அப்போதும் இப்போதும் அத்தனை பேரின் நாடித் துடிப்பிலும் சூடேற்றும் வசீகர குரலுக்குச் சொந்தக் காரர் பாடகி ஜென்சி. இப்போது, என்ன செய்துகொண்டிருக்கிறார் என்று நாம் தொடர்புகொண்டு பேசியபோது; அதே இனிமையான குரலில் தாலாட்டுகிறது அவரது பேச்சு.

**எப்படி இருக்கீங்க? சினிமாவுல பாடல்கள் பாடி ரொம்ப நாள் ஆச்சே, என்ன காரணம்?**

நல்லா இருக்கேன். திருமணம் ஆனதும் எர்ணாகுளத்துல செட்டில் ஆகிட்டோம். கணவர் கிரிகரி பிசினஸ் பண்றாரு. மகன் நிதின் அமெரிக்காவுல எம்.எஸ். படிச்சிட்டு, அங்கேயே வேலை. பொண்ணு நூஃபியாவுக்குத் திருமணமாகி ஆஸ்திரேலியாவுல செட்டில் ஆகிட்டா. நானும் கணவரும் மட்டும்தான் கேரளாவுல இருக்கோம். இப்போ பக்தி பாடல்கள் மட்டுமே பாடிக்கிட்டு இருக்கிறதால சினிமாவுல கவனம் செலுத்த முடியல. பக்தி பாடல்கள் பாடுறது மனசுக்கு ஆத்மார்த்தமா இருக்கு. எல்லோரும் தெய்வீக குரல்னு சொல்வாங்க. அது தெய்வத்துக்கே சொந்தமாகிடுச்சு. ஆனால், மலையாள சினிமாவுல அவ்வப்போது பாடுகிறேன். ஓய்வு நேரங்கள்ல ஓவியம் வரையுறது, கவிதைகள் எழுதறதுன்னு பொழுதை பயன்படுத்திக் கொண்டு இருக்கேன்.



**தமிழ்ப் படங்களில் ஏன் பாடுறதில்ல?**

திருமணம் ஆனதும் சென்னையிலிருந்து கேரளாவுல செட்டில் ஆகிட்டேன். ஒரு வேளை நான் சென்னையிலேயே இருந்திருந்தா நிறைய பாடல்கள் பாடியிருக்கலாம். ஆனால், தமிழ்ல பெரியளவுக்கு வாய்ப்புகளும் வரல. அப்படியே வந்தாலும் அங்கிருந்து, சென்னைக்கு வந்துட்டுப்போற பயணம் ரொம்ப சிரமமா இருக்கு. ரொம்ப இனிமையா பாடுற புதிய புதிய இளம் பாடகர்கள் சினிமாவுக்கு வந்துட்டாங்க. இந்நிலையில, என்னோட குரல் செட் ஆகுமான்னு தெரியல.

**பாடகி ஆனது எப்படி?**

பெரியப்பா, அண்ணன்கள் எல்லோருமே ஆர்கெஸ்ட்ராவுல பாட்டு பாடுறவங்கதான். அதைப் பார்த்துதான் எனக்கு பாடணுங்குற ஆசையும் ஆர்வமும் உருவானது. சின்ன வயசுல என்னை ஆர்கெஸ்ட்ராவுக்கு கொண்டுவந்ததே தாஸ் அண்ணாதான் (பாடகர் ஜேசுதாஸ்). அவர் மட்டுமில்லைன்னா இந்தளவுக்கு நான் வளர்ந்திருக்கவே முடியாது. அவர்தான், என்னோட குரலை கேட்டு நிறைய ஆர்கெஸ்ட்ராவுல பாடுறதுக்கு வாய்ப்பு கொடுத்தாரு. அதன் மூலமாத் தான் மலையாள படங்களில் பாட வாய்ப்பு கிடைச்சுது. பிறகு, ‘திரிபுரசுந்தரி’ங்குற படத்துல பாட புதுசா ஃப்ரெஷ்ஷான குரல் வேணும்னு இளையராஜா சார், தாஸ் அண்ணாக்கிட்ட கேட்க, என்னை பரிந்துரை செய்தார் தாஸ் அண்ணா. குரல் ரெஸ்ட் எடுத்ததுமே சூப்பரா இருக்குன்னு வாய்ப்புக் கொடுத்தார் ராஜா சார். ‘வானத்துப் பூங்கிளி’ங்குற பாடலை அதுவும் ஜானகி அம்மாக்கூட பாடுற மிகப் பெரிய வாய்ப்பு கிடைச்சது. பாடினது பிடிச்சதும் அதே படத்துல ‘வட்டத்துக்குள் சதுரம்’னு இன்னொரு பாடலும் பாட வாய்ப்பு கிடைச்சது. அதற்குப்பிறகு, ‘முள்ளும் மலரும்’ படத்துல ‘அடி பெண்ணே’ பாட்டை பாட மகேந்திரன் சார் வாய்ப்பு கொடுத்தார். ஷோபா ரொம்ப ரொம்ப அழகா இருக்கிறது மட்டுமில்ல, அவங்க எனக்கு பிடிச்ச நடிகையும்கூட அவங்களோட பாடலுக்கு பின்னணி குரல் கொடுத்தது மறக்க முடியாதது.

**இசைஞானி இளையராஜாவுடன் பணி யாற்றிய அனுபவம்?**

நான் ஆர்கெஸ்ட்ராவுல பாடிக்கிட்டிருக்கும்போது ‘அன்னக்கிளி’ படத்துல வர்ற மச்சானைப் பார்த்தீங்களா? பாடலை அடிக்கடி பாடி கைத்தட்டல் பாராட்டுக்களை வாங்குவேன். அப்பேர்ப்பட்ட இசை ஞானியோட படத்துல எனக்கு பாட வாய்ப்பு கிடைச்சதை வார்த்தைகளால வர்ணிக்க முடியாது. அவர் ஒரு ஜீனியர்ஸ்"ன்னு எல்லாருக்குமே தெரியும். 100 வருஷங்கள் என்ன 1000 வருடங்கள் ஆனாலும் அவரோட பாடல்கள் நிலைச்சு நின்னுக்கிட்டே இருக்கும். ஞானிக்கிட்ட கற்றுக்காம இருக்க முடியுமா? எப்படி பாடணும்னு பல்வேறு விஷயங்களை கற்றுக் கொடுத்திருக்காரு. அவர்கூட பாடும்போது ஒருவித பயம் இருந்துக்கிட்டே இருக்கும். ‘கிழக்கே போகும் ரயில்’

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)




# HomeLife / GTA Reality Inc.

## 21ஆவது ஆண்டு விருது விழாவும், ஒன்றுகூடலும்

ராஜா மகேந்திரன் மற்றும் எடி வூ (Eddie Woo) ஆகியோரின் நிர்வாகத்திலான இந்நிறுவனம் தனது 21ஆவது விருது விழாவை ஜனவரி 18/2023 அன்று ரொறொன்ரோவில் சிறப்பாக கொண்டாடியது.

ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதியின் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஹரி ஆனந்தசங்கரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்வருட Top Producer - ரதீஸ் சுப்பிரமணியம்
2nd Top Producer - ஜோர்ஜ் பரந்தாமன்
3rd Top Producer - தீபக் டானி (Deepak Dani)

சகல முகவர்களிற்கும், ஆதரவாளர்களிற்கும், வெற்றியாளர்களிற்கும் **Home Life / GTA Reality Inc.** தனது வாழ்த்தினை தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றது














L, INVEST & PROSPER
HomeLife
fe/GTA Realty Inc.
s yours,
bligation is ours"
416-321-6969
TA Square
ON., M1S 0C2
Canada




















## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt. for rent. Sep entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 300.7595**

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு:**416.768.3444**

**MARKHAM & HWY 7**
1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: :**647.883.1054**

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to All facilities. Avail. February 01, 2023. Ladies prefered.
**647.838.5448 / 647.201.7016**

**TAUNTON & WESTNEY**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, new appliances. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.657.7191**

**16TH AVENUE & MARKHAM**
2 Bedrooms bsmt.for rent , Sep entrance, 1 bathroom, 1 parking, Shared laundry. Avail. March 01, 2023. தொடர்புகளுக்கு:
**416.262.4973 / 905.471.7773**

**STEELES (TAUNTON) & WHITES ROAD**
2 bedroom bsmt for rent. Parking, laundry. Close to bus & other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.560.5704**

**PORT UNION & LAWSON**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, 2 full washroom, parking. Close to TTC, Centennial college, Scar. campus, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.502.0312**

**MORNINGSIDE & MCNICOLL**
Furnished 1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry. Student or working woman preferred. Avail. February 01, 2023.
**647.716.8476** call after 6.30pm

**ALTONA & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Nice environment with close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.729.4704**

33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, parking & laundry. Working people preferred. Avail. immediately.
**647.505.2582 / 905.471.2582**

## BASEMENT FOR RENT

**MEADOWVALE & SHEPPARD**
Brand new 3 bedroom bsmt for rent. Sep. entrance. 2 washrooms, Parking. Close to all facilities. Avail. February 01, 2023.
தொடர்புகளுக்கு:**647.856.0250**

## BASEMENT FOR RENT

**HARMONY & TAUNTON – OSHAWA**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking . Close to shopping, school & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.285.4129**

## BASEMENT FOR RENT

**STEELES & STAINES MORNINGSIDE**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to all facilities. No pets, no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.878.2801**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
2 large rooms, 2 washrms with lots of natural light. Sep. entrance. Bright kitchen, potlights. Close to all amenities. 1 parking. Bills incl. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.887.5478**

## BASEMENT / ROOM FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
2 bedroom basement for rent. Laundry, internet & parking.
Also 1 Bedroom for rent (main floor) Sep. washroom, internet & parking. Avail. immediately.
**905.294.3531/ 647.330.7482**

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
1 Room for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.495.9775**

**ROSSLAND & CHURCH (AJAX )**
1 bedroom for rent in a 2 bed room Bsmt Apt. 1 parking, laundry. Girls only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.716.2706**

**MARKHAM & DENISON**
1 bedroom for rent in a 2 bed room Bsmt Apt. Furnished, Sep. entrance, Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.249.0069**

**NEILSON & SHEPPARD**
Room for rent. Female preferred. Avail. immediately.
**416.875.4257 / 647.444.7218**

**TAUNTON & BURKHOLDER**
1 Bedroom for rent in a new house - upstaris. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.
**647.203.8774 / 647.467.1622**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedroom bsmt for rent. 2 washrooms, sep. entrance, Parking & sep.laundry. Few steps to bus stop & other facilities. Avail. March 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.305.7317**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVE. MARKHAM**
2 bedrooms+ 2 bathrooms basement for rent. Sep. entrance, laundry, 1 car parking, no pets & no smoking. Close to David Suzuki Public School. Avail. March 01, 2023.
**416.930.3713 / 416.768.1824**

## ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**
1 Bedroom for rent.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

மேலும் பக்கங்கள் 13,14,15

## HOUSE FOR RENT

**MARKHAM & MCLEVIN**
2 bedrooms condo. town house for rent. 1 car parking & 1 washroom. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.254.7648**

**MIDLAND & EGLINTON**
3 bedroom house for Rent. Parking Available Immediately.
**416.463.1822 / 416.833.7729**

**MORNINGSIDE & MCNICOLL**
3 bedroom house for rent. Parking, laundry. Close to School & all facilities. Avail. February 15, 2023.
தொடர்புகளுக்கு: **416.648.7078**

**TOWNHOUSE FOR RENT**
**MORNINGSIDE & KINGSTON**
